**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ம் நாள் புதன்கிழமை**
**I.A.07/25 in O.S.142/2023**

தமிழரசி (எ) முத்தமிழ்ச்செல்வி ... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. கந்தன்,
2. சதீஷ்,
3. வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆண்டிமடம் & வட்டம்,
அரியலூர் மாவட்டம்.
4. வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
உடையார்பாளையம் & வட்டம்,
அரியலூர் மாவட்டம்.
5. மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர் மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 26.02.2026-அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.இள.சிவராமன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.தமிழ்காந்தி அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

1. இம்மனுவானது கடந்த 12.06.2024 தேதியில் தள்ளுபடியான அசல் தாவாவினை Restore செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 174 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்தரவாக வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரரின் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:-**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், தாவா சொத்தில் மனுதாரருக்குரிய உரிமையிலும், அனுபவத்திலும் 1,2 எதிர்மனுதாரர்களோ, அவரது

ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும், தாவா சொத்திற்கு மனுதாரர் பெயருக்கு 3, 4, 5 எதிர்மனுதாரர்கள் பட்டா வழங்க 3, 4, 5 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டி தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி தாவாவிற்கு மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக கடந்த 12.06.2024 தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி வாய்தாவிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே மனுதாரருக்கு வயது மூப்பின் காரணமாக உடல்நிலை சரியில்லாமல் போனதால் அதற்கு மனுதாரர் வீட்டில் இருந்தே நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததால் மனுதாரர் தனது வழக்கறிஞரை சந்தித்து தனது தரப்பு கட்சியை சொல்லி மனுதாரர் தரப்பில் சாட்சியம் விசாரிக்க முடியாமல் சென்றுவிட்டது என்றும், இதனால் மனுதாரர் சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 12.06.2024 தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு உடல்நிலை சரியாகி மனுதாரர் தனது வழக்கறிஞரை கடந்த 26.12.2024 தேதியன்று சந்தித்து தனது வழக்கு பற்றிக் கேட்டபோது வழக்கு தள்ளுபடியானதை கூறினார்கள் என்றும், இது பற்றிய விவரம் மனுதாரருக்கு தெரிந்தவுடன் தள்ளுபடியான தனது தாவாவை Restore செய்ய மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 174 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து தனது Restore மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனுவை தாக்கல் செய்கிறார் என்றும், இது மனுதாரரது கவனக்குறைவாலோ, அஜாக்கிரதையாலே ஏற்பட்டது அல்ல என்றும், இது தற்செயல் நிகழ்வாகும் என்றும், எனவே கடந்த 12.06.2024 தேதியில் தள்ளுபடியான அசல் தாவாவினை Restore செய்ய மனு தாக்கல் செய்வதில் எற்பட்ட 174 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்தரவாக வேண்டும் என்று மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து அதனை 2 எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம் :–</u>**

3. மனுதாரரின் மனு சரியல்ல என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் தாவா சொத்தானது மனுதாரர் பெயருக்கு 3, 4, 5 எதிர்மனுதாரர்கள் பட்டா வழங்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்நிலையில் மனுதாரர் தரப்பு விசாரணைக்காக கடந்த 12.06.2024 அன்று வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும், மேற்படி தேதியன்று மனுதாரர் வேண்டுமென்றே ஆஜராகாமல் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்காமல் இருந்துவிட்டு, தற்பொழுது

இம்மனுவின் அம்சங்களை வலுசேர்க்க ஏதோ மனுதாரருக்கு மேற்படி வாய்தா தேதிக்கு முன்னதாகவே உடல்நிலை சரியில்லாமல் வீட்டிலேயே நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததாக பொய்யாக தெரிவித்துள்ளார் என்றும், ஆனால் மனுதாரர் தனக்கு என்ன வகையில் நோய்வாய்ப்பட்டது என்பது குறித்து மனுவில் குறிப்பிடவில்லை என்றும், மேலும் அசல் வழக்கில் தனது சாட்சியை முன்னிறுத்த வேண்டிய காரணத்தை குறிப்பிடாமல் அசல் வழக்கை ரெஸ்டோர் செய்ய வேண்டும் என்றும், ரெஸ்டோர் மனுவை 174 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்திருப்பது இந்த எதிர்மனுதாரர்களை அலைக்கழித்து மனுவை தற்போது தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆகையால் மனுதாரரின் இந்த மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>பிரச்சனைக்குரிய தீர்வு.</u>

6. மனுதாரர் தனது மனுவில் இம்மனுவை தாக்கல் செய்த போது மனுதாரர்/வாதிக்கு வயது 63 என்றும், மனுதாரர் தனது பிராமாண வாக்குமூலத்தில் மனுதாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்காக கடந்த 12.06.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டு இருந்தது என்றும், மேற்படி வாய்தாவிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே மனுதாரருக்கு வயது மூப்பின் காரணமாக உடல்நிலை சரியல்லாமல் போனதால், மனுதாரர் வீட்டில் இருந்தே நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததால், மனுதாரர் தனது வழக்கறிஞரை சந்தித்து தனது தரப்பு கட்சியை சொல்லி மனுதாரர் தரப்பில் சாட்சியம் விசாரிக்க முடியாமல் சென்றுவிட்டது என்று குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளார். அதனை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில் கடந்த 12.06.2024 அன்று மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்டிருந்த அன்று மனுதாரர் வேண்டுமென்றே ஆஜராகாமல் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்காமல் இருந்துவிட்டு, தற்பொழுது வாய்தா தேதிக்கு முன்னதாகவே உடல்நிலை சரியில்லாமல் வீட்டிலேயே நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததாக பொய்யாக தெரிவித்துள்ளார் என்றும், ஆனால் மனுதாரர் தனக்கு எந்த வகையான நோய்வாய்பட்டது என்பது குறித்து மனுவில் குறிப்பிடவில்லை என்று மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

7. இருப்பினும் மனுதாரர் தனக்கு வயது மூப்பின் காரணமாக உடல்நிலை சரியல்லாமல் போனதாக தனது மனுவிலும், பிராமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதை கருத்தில் கொள்ளும் பட்சத்தில் காலதாமதமான 174 நாட்கள் கால தாமதத்தை மன்னிக்க கோரி தாக்கல் செய்துள்ள மனு ஏற்புடையதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்பதன்படி பார்க்கும்பொழுதும், இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேற்படி மனுதாரரின் மனுவை அனுமதிப்பதால் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு போக்குவரத்து மற்றும் இதர செலவீனங்கள் ஏற்படக் கூடும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு, செலவுத்தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. **எனவே முடிவாக,** மனுதாரர் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகை **ரூ.2,000/–**யை வரும் **03.06.2026** ம் தேதியன்று அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

வாய்தா அழைக்க.**05.06.2026**

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:
இல்லை.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.